**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.13/2024

வாதி தரப்பு சாட்சி வா.சா.1 ஐ 44/1969 பிரிவின்படி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 28.01.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வா.சா.1– பாக்கியம், க/பெ. தங்கராஜ்</u>**

**<u>1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. 1 ம் பிரதிவாதி என் கணவர். என் மாமனார் பெயர் மாணிக்கம். எனக்கும், என் கணவருக்கும் பாலமுருகன், ரத்தினசாமி, தமிழ்செல்வி, திலகவதி, சத்யா ஆகியோர் வாரிசுகள். தமிழ்செல்வி, திலகவதி ஆகியோருக்கு திருமணம் ஆகிவிட்டது. சத்யாவிற்கு இன்னும் திருமணமாகவில்லை. ரத்தினசாமிக்கு திருமணமாகிவிட்டது. பாலமுருகனுக்கு திருமணமாகவில்லை. குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் நானும், ரத்தினசாமி, தமிழ்செல்வி, திலகவதி, சத்யா ஆகியோர் ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்தோம். அப்போது ரத்தினசாமி, தமிழ்செல்வி, திலகவதி, சத்யா ஆகியோர் 18 வயதிற்கு உட்பட்டவர்கள். அந்த வழக்கு சமாதானமாக முடிந்தது என்றால் சரிதான்.

2. நான் வழக்கு போட்டபோது ரத்தினசாமி 18 வயதிற்கு மேற்பட்டவர் என்றால் சரியல்ல. அவர் 7 ம் வகுப்பு படித்தார். அந்த வழக்கில் மாதம் ரூ.2,000/– தர சொல்லி தீர்ப்பானது. திருமண செலவிற்கு பணம் தர வேண்டும் என உத்தரவானதா என்றால் திருமணத்தில் போது ரூ.2,00,000/– பணம் வாங்கியுள்ளேன். மேற்படி தீர்ப்பின்படி எனக்கு மட்டுமே ஜீவனாம்சம் பெற அருகதை உள்ளது என்றால் எனக்காக ஜீவனாம்சம் கேட்கவில்லை. வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் பில்லாபாளையத்தில் உள்ளது.

3. 2 ம் பிரதிவாதி என் கணவரிடம் சொத்தை விலைக்கு வாங்கியுள்ளார். 2009 ம் ஆண்டு 2 ம் பிரதிவாதி என் கணவரிடம் சொத்தை விலைக்கு வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எப்போது தெரிந்துகொண்டேன் என்றால் தற்போது கொஞ்ச நாளுக்கு முன்பு தான் தெரியும். காடுவெட்டியில் 4–5 வருடங்களுக்கு முன்பு என் சித்தி வீட்டில் குடியிருந்தேன். சுமார் 6 மாதம் அங்கிருந்தேன். உடல்நிலை சரியில்லாமல் என் சித்தி வீட்டில் குடியிருந்தேன் என பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். எனக்கு

உடல்நிலை சரியில்லாமல் என் சித்தி வீட்டில் குடியிருந்தேன் என சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. என் கணவருக்கு மொத்தம் எத்தனை சொத்து இருந்தது என்றால் என் திருமணத்திற்கு முன்பாக அவருக்கு சொத்து இல்லை. வேலை மட்டும் இருந்தும். அவர் தமிழக அரசு கல்வி துறையில் ஆசிரியராக இருந்தார். குளித்தலை சார்பு நீதிமன்ற அ.வ.எண்.12/2000 வழக்கில் உள்ள சொத்து என் கணவர் பெயரில் உள்ளது என்றால் அவர் அவர்பெயரில் எழுதி கொண்டார். யார் செலவு செய்து வாங்கியது என்றால் நான் ஒரே மகள். எங்கள் வீட்டில் ஆண்வாரிசு இல்லை. எங்கள் வீட்டில் 1 ஏக்கர் நிலம் எழுதி கொடுத்தார்கள். நகை போட்டார்கள். அந்த நிலம் என்னிடம் உள்ளது.

5. குளித்தலை சார்பு நீதிமன்ற அ.வ.எண்.12/2000 வழக்கில் என்னுடைய பணத்தை வைத்து என்னுடைய கணவரின் பெயரில் சொத்து வாங்கப்பட்டது என சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி அ.வ.எண்.12/2000 வழக்கின் தீர்ப்பை மீறி 2ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என கூறுவது தவறு என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வேலையிலிருந்து ஓய்வு பெற்றபோது, அதன் பணபலன்களில் நான் எவ்வளவு பெற்றேன் என்றால் ரூ.2,00,000/- பெற்றேன். என் கணவர் 2ம் பிரதிவாதிக்கு சொத்தை எழுதி கொடுத்தது எனக்கு 2009ம் ஆண்டே தெரியும் என்றும், அதை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. 2ம் பிரதிவாதி எப்போது சொத்தை கிரையம் பெற்றாரோ அன்றை தேதியிலிருந்து சொத்து அவரது அனுபவத்தில் உள்ளது என்றால் ஆமாம். ஐயப்பனிடம் போக்கியத்திற்கு சொத்தை கொடுத்ததாக வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை மோசடி செய்ய வேண்டி வா.சா.ஆ.2 30.04.2009 கிரைய பத்திரத்தை எழுதியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி கிரையம் கொடுத்த சொத்தை அவர் அனுபவம் செய்து வந்து, வா.சா.ஆ.2 30.04.2009 கிரைய பத்திரம் மூலமாக 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த பிறகு, 2ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் என் மகன் பாலமுருகன் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான்.

7. 2ம் பிரதிவாதி பில்லாபாளையத்தில் காலனியில் வசித்து வருகிறார். 1ம் பிரதிவாதி மகள் சத்யாவிற்கு சர்வே எண். 133/1ல் ஏக்.0.34 செண்ட் நிலத்தை

ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி மகள் திலகவதிக்கு சர்வே எண். 107/5ல் 58 செண்டில் 20 செண்ட் நிலத்தை ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி மகள் தமிழ்செல்விக்கு சர்வே எண். 107/5ல் 58 செண்டில் 20 செண்ட் நிலத்தை ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி மகன் ரத்தினசாமிக்கு சர்வே எண். 107/5ல் 58 செண்டில் 18 செண்ட் நிலத்தை ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் படி நான்கு வாரிசுகளுக்கு கொடுத்த சொத்துகளை அவர்அவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அது முள்ளுகாடு. யாரும் போகமாட்டார்கள்.

8. எனக்கும் எனது 5 குழந்தைகளுக்கும் விரோதம் எதுவுமில்லை. 1ம் பிரதிவாதி குழந்தைகளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் குறித்து எனக்கு நன்கு தெரியும் என்றும், அதை மறைத்து தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கும், எனது குழந்தைகளுக்கும் வருமானம் இல்லாததால், ஜீவனாம்சம் கொடுக்காமல் 2ம் பிரதிவாதிக்கு சொத்தை கிரையம் எழுதி வைத்தது சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்த பிறகு எனது கணவர் 4 குழந்தைகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரத்தை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

9. நான் ஜீவனாம்சம் கோரி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எடுத்துள்ளேன். நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியவுடன், பஞ்சாயத்தார் உதவியுடன் என் கணவர் என்னை கேட்டபோது, நான் நடவடிக்கை எடுக்கமாட்டேன் என சொன்னதால், என் கணவர் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தை பொறுத்து, 2024ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்றுக்கொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு படி தீர்ப்பாக தக்கதல்ல என்றும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எனது அனுபவத்தில் ஒருபோதும் இல்லை என்றால் சரியல்ல.

**2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/– M.Santhosham,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.